# நிராமயக் கண்ணி உணர்த்தும் சமயச் சிந்தனைகள்

முனைவர் கே. இரா. கமலாமுருகன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி) .
kamalamurugantamil@queenmaryscollege.edu.in

70

**ஆய்வுச்சுருக்கம்**

சமயநெறி என்பது சமயத்தில் வருவது அல்ல. நல்ல நெறியில் மனம் சமைக்கப்பட்ட பின் (பக்குவப்பட்ட பின்) வருவது, அவ்வகையில் தன்னை அறிந்து குருவாகி தான் கண்ட நெறி உணர்த்திய குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களில் நிராமயக் கண்ணியில் உள்ள சமயச் சிந்தனைகள் சிலவற்றை மட்டும் எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்**

புழுங்க - வருந்த
அண்டம் - உலகம்
அபயம் - அடைக்கலம்
கன்னல் - கரும்பு
பரிபூரணம் - முழுமை - நிறைவு
பந்தம் - உறவு
புலையர் - இழிந்தவர்
ஊத்தப்பிணம் - நாற்றமடிக்கும் பிணம்

**முன்னுரை**

உலகம் என்பது இறைவன் படைப்பு என்று கூறிவரும் சமயச் சிந்தனையாளர்களுக்கும் இயற்கை தான் உருவாக்கியது என்பதான கடவுள் மறுப்பாளர்கள் மற்றும் இயற்கை விரும்பிகளின் கோட்பாடுகளுக்கும் இடையில் இறையின் இயல்புகளை உணர்தல் என்பதும் சமய நுட்பங்களை அறிதல் என்பதும் எளிதான செயல் அல்ல என்பதுவே உண்மை. அவ்வாறு ''அவனருளால் அவன்தான் வணங்கி இறைமையை உணர்ந்து தெளிந்து மற்றவர்களுக்கும் நெறிப்படுத்தியவர்களை ஞானிகள், யோகிகள், சித்தர்கள் என்ற பல்வேறு பெயர்களால் சுட்டுகின்றோம். அவ்வகையில் மதம் கடந்த ஞானியாக வாழ்ந்து சென்றவர் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள். அவர்கள் எடுத்துரைத்த பல்வேறு மெய்யியல் தொடர்பான சிந்தனைகளுள் 'நிராமயக் கண்ணி' பகுதியில் அமைந்துள்ள மெய்யியல் பேசும் சமயச் சிந்தனைகளை எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**குணங்குடியாரின் சிறப்பு**

1792-இல் குணங்குடியில் தோன்றி சூபி ஞானியாக இளமையிலேயேத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டவர். குணங்குடியாரின் பாடல்கள் ''குர் ஆன் திருமொழிகளைப் பிரதிபலிப்பதாக தத்துவமும் வித்தகமும் நிறைந்து காணப்படுகின்றன'' (பதிப்புரை) பலருக்கும் ஞான உபதேசம் செய்திட்ட இவர், தியானத்தின் ஒரு நிலையாக மௌனத்தினையும் அமைத்துக்கொண்டார்.

எனவே மற்றவர்களுக்குக் கூடக் கருதிய செய்திகளை குறிப்பாகவும் எழுதியும் மட்டுமே காட்டியுள்ளார். இவரது சித்துகளையும் அற்புதங்களையும் கண்டவர்கள் இவரை அற்புதச் சித்தர், பித்தநடையர். போதைவெறி உடையவர் என்றெல்லாம் அழைத்தும் விமர்சனம் செய்தும் உள்ளனர்.

தமிழகத்தின் தென்கோடியில் பிறந்த இவர் சென்னை ராயபுரத்திலேயேத் தமது இறுதி நாட்களைக் கழித்துள்ளார். 1838-ஆம் ஆண்டில் தமது பரிபூரணத்தை நிறைவு செய்துள்ளார். இளம் நிலையிலேயே இவை நிகழ்ந்தமை இவரது ஞானத்தின் மற்றும் ஒரு சிறப்பாகவே அமைகின்றது. 1079 பாடல்கள் பல்வேறு பா வகைகளில் மிகவும் ஆழ்ந்த தத்துவ சமயச்சிந்தனைகளுடன் இவர் பாடியுள்ளார் இவரைப் புகழ்ந்துப் போற்றியும் பலர் பாமாலைகள் இயற்றியுள்ளனர் என்பது மற்றுமொரு சிறப்பாகும்.

**நிராமயக் கண்ணியில் சமயச் சிந்தனைகள்**

**இறைவனின் இயல்புகள்**

இறைவன் என்பவன் எண்வகை குணங்களாலும் நிறைந்தவன் என்பதனைப் பல்வகையான சமயங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இதனையே திருவள்ளுவனார் உலகப்பொதுமறையில்,

‘‘எண் குணத்தான் தாளை வணங்காத் தலை’’ என்று போற்றுகின்றார்.

எண் குணங்களும் வாய்த்தபின் அவை இறைவனை நிறைவானவனாகக் காட்சிப்படுத்துவதும் உணர்வதும் இறையருளார்களின் மனஉணர்வாகும்.

அவ்வகையில் முழுமைத்தன்மையுடைய இறைவன் என்று துவக்கத்திலேயே குணங்குடியார் இறைவனைச் சுட்டுகின்றார்.

‘‘ஆதிமுதலே அகண்ட பரிபூரணம் என்று ஒதுங்குணங் குடிகொண் டோனே!’’ - (நி.க.1)[1]

என்று பதிவிடுகின்றார்.

மேலும் தொடர்ந்து அந்த இறைவன் எங்கும் நிறைந்து ஆடுகின்ற ஞானாசிரியர் என்பதானத் தன்மையினையும்

‘‘தேசிகன் நான் என்றே திருநடன மாடுகிற’’ - (நி.க.2)[2]

என்றும்,

இறைவனின் திருவடிகள் தூய்மைத் தன்மையுடையது என்பதனை,

‘‘சுத்தத் திருவடியில் சொக்கி’’ என்றும்,

கண்ணாகவும் கண்ணின்மணியாகவும் கண்களில் காணப்படும் பொருளாகவும் வானமாகவும் உண்மை ஞானமாகவும் திகழ்பவன் இறைவன் என்பதனை,

‘‘கண்ணே மணியே என்
கண்ணிறைந்த காரணமே
விண்ணே மெய்ஞ்ஞான வெளியே’’

என்றும் காட்சிப்படுத்துகின்றார்.

இறைவன் நான் எனது என்னும் பற்றுகளை அறுத்தவன் இதனை

‘‘இறந்தான் முதலகத்தில் என்னதுயான் என்பதெல்லாம் - (நி.க.6)[3]

துறந்தானே''

என்றும்,

எக்காலத்திலும் வற்றாத கடலாகவும், வள்ளல் தன்மை உடையவனாகவும், உயர்ந்த இயல்புகளை உடையவனாகவும் தெளிந்த சிந்தனை உடையவனாகவும் திகழக்கூடியவன் பரம்பொருள் என்தபதனை,

''வற்றாச் சமுத்திரமே வள்ளலே வான்பொருளை

சித்தர் உளத்தின் தெளிவே'' - (நி.க.7)[4]

என்றும் 'தேவர்களும் எட்ட முடியாத தன்மையுடன் உயர்ந்த பொருளுடைய வேதங்களும் வந்து முறையிடக்கூடிய ஆற்றலுடையவன்' (நி.க.8) என்றும் கூறுகின்றார்.

கடல் போன்றவன் என்று முன்பு கூறினார். மீண்டும் கடலானவன் குறிப்பாக இன்பக்கடலானவன் அதிலும் தேன் அமிர்தத்தினைச் காய்ச்சி வடிகட்டிகடலாக வைத்ததானத் தன்மையுடையவன் என்பதனை,

''பேச்சுக் கடங்காத பேரின்பக்

காய்ச்சி வடித்த கடலே'' - (நி.க.9)[5]

என்ற பாடலடிகளில் உச்சமமான உணர்வின் பதிவினைப் போன்று அவர் கூறும் இன்ப அனுபவம் இறைவனின் உண்மைத்தன்மையி;ன் இயல்புகளை உண்மையில் வார்த்தைகளில் கூறிவிட முடியாது என்பது உண்மைதான்.

எனவே தான் தொடர்ந்து பேசும்போது காண்கின்ற அனைத்து இடங்களிலும் முழுமையாக நிறைவான தகுதிப்பாடுகளுடன் கலந்துள்ளவன் இறைவன் என்பதனையும்,

''பார்க்குமிட மெல்லாம் பரிபூரணமாக

ஏர்க்கையுடன் நின்ற இயல்பே'' - (நி.க.14)[6]

என்றும் பாடுகின்றார்.

ஆழ்வார்கள் ''திண்ணும் சோறும் பருகும் நீரும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்'' என்று கண்டதனைப் போன்றும்,

'காக்கைச் சிறகினிலும் காணும்

உறவினும் கண்ணனைக் கண்டு

மகிழ்ந்த பாரதியின்' உணர்வினிலும்

உள்ள நிறைவினை நாம் இங்கும் காண இயலுகின்றது.

இறைவனை அணுகுதல் என்பதும் அவனுடைய அருளைப் பெறுதல் என்பதும் 'அவனருளால் அவன் கால் வணங்குதல்' என்ற அனுபவ நெறியாகும். எனவே இறைவன் அரிய தன்மை உடையவன் என்பதனை ஆழ்வார்களும் நாயன்மார்களும், சித்தர்களும், ஞானிகளும் தத்தமது பதிவுகளில் எடுத்துணர்த்தியுள்ளனர்.

அவ்வகையில் குணங்குடியிலும், மனதாலும், வார்த்தைகளாலும் வர்ணித்திடவும் அணுகவும் முடியாததான உயர்ந்த ஒளிமயமான தன்மையுடையவனாகவும் தனக்கெனத் தனித்த மூலத்தோற்றமும்

சுற்றங்களும் இல்லாதத் தன்மையுடையவனாகவும் இறைவன் திகழ்கிறான் என்பதனை,

''மனவாக்கு அணுகா மறைத்த வான் செஞ்சுடரே
இனமாதி அற்ற இறையே'' - (நி.க.13)[7]

என்று பதிவிட்டுள்ளார்.

இறைவன் தனக்கெனத் தனித்த உருவமும் நாமமும் இல்லாதவன் என்பதனையும் அனைத்து சமயங்களும் ஏற்றுக்கொண்டுள்ளதனையும் நாம் அறிந்துள்ளோம்.

மேலும் ''ஆகாயம் முதல் பூமி வரையிலான பஞ்சபூதங்களாகவும்
(நி.க. 15)[8]

'அங்கு இங்கு என்று குறிப்பிட்டுக் கூறமுடியாமல்
எங்கும் நிறைந்துள்ளவனாகத் தன்மையுடையவன்' - (நி.க. 17)[9]

என்றும் பல்வேறான நிலைகளில் இறைவனின் தன்மைகளை உணர்ந்து எடுத்துரைக்கின்றார் குணங்குடியார்.

**அருள்நிலை அடைய வேண்டுதல்**

உலகில் உயிராகக் குறிப்பாக மனித உயிராகப் பிறந்தவர்கள் ஆணவன் கன்மம் மாயை என்ற கயிற்றினால் கட்டப்பட்டு வாழ்கின்றனர். அதனைக் கடந்து பதியாகிய தலைவனைத் தேடும்போதே இதனை உணர்ந்து வேண்டுகிற தன்மையினையும் நிராமயக் கண்ணியில் குணங்குடியார் பதிவு செய்துள்ளார்.

அஞ்ஞானம் நிறைந்த என்னுடைய அறியாமையினை நீக்கி உன்னுடைய திருவருளினை அளித்திட வேண்டும் என்று வேண்டுவதனை,

''சிந்தை அறிவைச் சிதையவிட்டு உன் அருள்பெறவே
வந்தேற்குமுன் திருக்கருணை வைப்பாய்'' - (நி.க. 36)[10]

என்றும்,

'அதிகமான துன்பத்தினில்
அவதிப்பட்டு அதிலிருந்து விடுபடுவதற்கு
இங்கு வந்தோரைக் காப்பாய்' - (நி.க. 29)[11]

என்றும்,

'குரங்கு அலையும் புத்தி அதிலும் பேய்ப் புத்தியும்
பித்தம் பிடித்த நிலையினையும் தன்மை
யுடைய மனதைக் காக்க வேண்டும்' - (நி.க. 30)[12]

என்றும்,

என்னுள் நிறைந்துள்ள அழிந்துபோகும் தன்மையுடைய பசு, பாசங்கள் அழிந்திடும்படியாக எனக்குத் திருவருள் செய்ய வேண்டும் என்பதனை,

''மாயும் பசுபாச மடிய மடிய அருள்
தாயனைய இன்பம் தருவாய்'' - (நி.க.27)[13]

என்று வேண்டுகின்றார்.

உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் துணையில்லை என்று நாம் விரும்பும் இறையிடம் சரணடைந்து வேண்டுதலே அருள்நிலை அடைதலின் முதல்படி நிலையாகும். அவ்வகையில் குணங்குடியாரும் இங்கே யார் இருந்தால் என்ன? யார் எங்குப் போனால் என்ன? என்னுடைய உயிரினுக்கு உற்ற துணையாக உடையனாக உனது அருளைத் தந்து என்னை உயிர் பிழைக்கச் செய்ய வேண்டும் என்று வேண்டுவதனை,

''ஆரிருந்தென் ஆர்போயென் ஆவிக்கு உறுதுணையாம்

பேறு பெறச் செய்தாற் பிழைப்பேன்'' - (நி.க.32)[14]

என்று வேண்டுகிறார். என்ன வேண்டும் என்தனையும் நிஷ்டை, நிர்விகற்ப நித்திரை இவைகளை உடைய அஷ்டாங்க யோக நிலையினை எனக்கு அருள் செய்ய வேண்டும் என்பதனை,

''நிட்டை நிருவிகற்ப நித்திரை கொண்டேயிருக்க

அட்டாங்க யோகமெனக் கருள்வாய்'' - (நி.க.8)[15]

என்று வேண்டுகிறார்.

வேண்டுதலையும், விரதங்களையும், தவங்களையும் முறையாகச் செய்தவர்கள் தத்தமக்குரிய அருள் நிலைகளை அடைந்துள்ளனர் என்பதனையே நமது சமயநூல்கள் விளக்குகின்றன.

கருவிலேயே திருவுடைய சிலருக்கு மட்டும் மேற்சொன்ன வழிமுறைகள் இன்றியும் இறையருள் கிட்டும் என்பதும் கண்கூடு. இம்முறை யாவினையும் உணர்ந்தவராய் குணங்குடியார் தன்னை உணர்ந்து தெளிந்தவர்களாலேயே தலைவனான இறைவனையும் உணர முடியும் என்பது உண்மை என்ற கருத்தினை,

''தன்னை யறிந்தாற் றலைவன் தனையறிந்த

தென்று மொழியே யிதங்காண்'' (நி.க.70)[16]

என்று தெளிவுபடுத்துவன் மூலம் தானும் உணர்ந்தமையை எடுத்துரைக்கின்றார்.

முன்னர் கூறியதனைப் போன்று பக்தி நெறிகளுக்குட்பட்டவர்களுக்கு மட்டுமின்றி யாவர்க்கும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இறையருளை வழங்கக் கூடியவன் இறைவன் என்பதனையும், இரவும் பகலும் என்னும் நிலைகளை நீக்கிய காரணர்களுக்கு மட்டுமா நீங்கள் உம்முடைய திருவருளினை அளித்துள்ளீர்கள்? என்று இறைவனையே வினவுதான தன்மையில்,

''கங்கில் பகலொழித்த காரணர்க்கோ நின்னருளைப்

பங்கு கொடுத்தாய் பகராய்'' - (நி.க. 75)[17]

என்ற வினாவின் மூலம் இறையின் அருள் தன்மையை எவரும் உய்த்துணர்தல் எளிதன்று என்பதனை எடுத்துரைக்கின்றாய். இவைகளைக் கடந்து தாம் அருள் பெற்ற நிலையினையும் மேன்மைத் தன்மையுடைய மோட்சநிலையாகிய பிறவாப் பேரின்ப நிலையினைக் கொடுத்திடக்கூடிய நெறிகளை வழியில் நடந்திடக்கூடியவரான குரு என்னுடைய இணையாக உள்ளார் என்பதனைப் பெருமையாகவே,

''முத்தி தரும் வேதம் மொழிந்தி வழிநடக்கப்

பெற்ற குரு என் பிணைகாண்'' - (நி.க. 22)[18]

என்று எடுத்துரைக்கின்றார்.

மேலும்

''நின்னைச் சரண் புகுந்தாய் நிர்மூட மாகஎனை

என்னத்துக்கு ஆட்கொண்டது இயம்பாய்'' - (நி.க.35)[19]

என்றும் பதிவுசெய்து தமக்கு அருள் கிடைத்தமையை உணர்த்துகின்றார்.

**நிறைவுரை**

'மனம் அது செம்மையானால்

மந்திரம் செபிக்க வேண்டாம்'

என்று சித்தர் நெறி கூறினாலும் ,

'மனத்துக்கண் மாசிலன் ஆதல்'

என்று வள்ளுவர் கூறினாலும்,

அருள் நிலையினை அடைய அன்பு நெறியில் நடைபயில தன்னகரில்லாத் தலைவனை சரணடைய வேண்டும். இதற்கு மர்ச்சலஞாயம் பெரும்பாலும் உதவாது மார்க்கடஞாயமே வேண்டும் என்பதனையும் தமது பல்வேறு பாடல்களால் உணர்ந்து உணர்ந்து உணர்த்துகின்ற குணங்குடியாரின் சமயச் சிந்தனைகளால் நிராமயக் கண்ணி கூறும் சில பருக்கைகள் மட்டுமே இங்கு பரிமாறப்பட்டன. இது பசியாறப் போதுமானது அல்ல. ஆனாலும் பசியாற்றும் நெறி கூறுவதாகும்.

**அடிக்குறிப்பு**

1 முதல் 19 வரை நிராமயக் கண்ணி - குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் மூலமும் முறையும் பயன்படுத்தப்பட்டது.

**ஆய்விற்கு உதவிய முதன்மை ஆதாரம்**

குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்

மூலமும் உரையும்

முனைவர் கே.இரா. கமலாமுருகன்

சாரதா பதிப்பகம், சென்னை – 5